5

மாதாவே சரணம் – உந்தன்
பாதாரம் புவிக்கு ஆதாரம் – கன்னி
மாதாவே சரணம்.

மாபாவம் எம்மை மேவாமல்
காப்பாயே அருள் ஈவாயே – கன்னி
மாதாவே சரணம்.

மாசில்லா மனமும் இயேசுவின் உள்ளமும்
மாந்தரின் தவறால் நோயுறக் கண்டோம்
செபம் செய்வோம் தினம் செபமாலை சொல்வோம்
பாவத்திற்காக பரிகாரம் புரிவோம்.

மானிடத்தில் சமாதானமே நிலவ
நாத்தீக உலகம் ஆத்தீகம் அடைய
உயிருடல் அனைத்தும் உவப்புடன் அளித்தோம்
உம் இருதயத்தில் இன்றெமை அணைப்பாய்.

# 2008 புத்தாண்டுத் திருப்பலி

**வருகைப் பாடல்.**

இன்று நமக்காக மீட்பர் பிறந்துள்ளார் – 2
அவரே ஆண்டவர் மெசியாவாம் – 2

ஆண்டவரை பாடுங்கள்
அவர் பெயரை வாழ்த்துங்கள் – 2
அவரை அறியார் நடுவினில்
அவரின் மாட்சியை சொல்லுங்கள் – 2
வயல்வெளி நல்ல மலர்களும்
வாழ்த்தி பாடி மகிழுங்கள் – இன்று

வானங்கள் மகிழட்டும்
வையகம் களிகூரட்டும் – 2
கடலும் அதில் வாழ் அனைத்துமே
களிநடனம் புரியட்டும் – 2
நீதி நேர்மை நிறைந்திடும்
நிலைத்த ஆட்சியை அடையுங்கள் – இன்று



2

**தியானப் பாடல்**

அமைதியின் தூதனாய் என்னையே மாற்றுமே
அன்பனே இறைவனே என்னிலே வாருமே
— அமைதியின்..

பகைமை உள்ள இடத்தில்
பாசத்தை வளர்க்கவும்
வேதனை நிறைந்த மனதில்
மன்னிப்பு வழங்கவும்
கலக்கம் அடையும் வாழ்வில்
நம்பிக்கை ஊட்டவும்
— அமைதியின்

தளர்ச்சி தோன்றும் பொழுது
மனத்திடம் தழைக்கவும்
இருளே சூழும் வேளை
ஒளியை ஏற்றவும்
துயரம் வாட்டும் நேரம்
உதயம் காணவும்
— அமைதியின்

ஆறுதல் அன்பை அளித்து
புரிதலை வளர்க்கவும்
கொடுப்பதில் நிறைவைக் கண்டு
மன்னித்து வாழவும்
தன்னலம் ஒழித்து புதிய
உலகம் படைக்கவும்
— அமைதியின்

**காணிக்கைப் பாடல்**

3

எல்லாம் தருகிறேன் தந்தாய்
என்னையும் தருகிறேன்

இயற்கை தந்த மலர்கள் பறித்தே
தருவேன் உமக்கு காணிக்கை
உழைப்பின் பயனாய் கிடைத்த பொருளை
என்னோடு இணைத்தே தருகிறேன் (2)

பிறருக்காய் வாழ்வதில் நானும்
என்னையே உம்மிடம் தருகிறேன்
பிறரின் சுமையை விரும்பிச் சுமக்க
என்னையும் தகுதியாக்குவாய் (2)



4

**நற்கருணைப் பாடல்**

மண் குளிரும் காலம்
நள்ளிரவின் நேரம்
மன்னவன் பிறந்துள்ளான்
விண்ணகத்தின் கானம்
மண்ணகத்தில் வந்து
மன்னவனை வாழ்த்துதே — மண்

அடிமை விலங்கை
அவனியில் தகர்த்த
இயேசு பிறந்தாரே
உண்மையின் ஒளியை
உலகில் ஏற்ற
தேவன் பிறந்தாரே
உண்மை அன்பு
சாந்தம் கொண்டு
தன்னை தந்தாரே — உண்மை, மண்

மண்ணக வாழ்வில்
விண்ணகம் காண
மன்னவன் பிறந்தாரே
மாந்தரின் நடுவில்
தேவனின் அருளை
கொண்டு வந்தாரே
தந்தையோடு நம்மை சேர்க்க
தரணி வந்தாரே — தந்தையோடு, மண்